தமிழ்ச்சிட்டு

சிறுவர்
கலை இலக்கியத்
திங்களிதழ்

தென்மொழி
இணைப்பு
(சுறவம் 2031)

குரல் : 23
இசை : 1

உங்களுக்குத் தெரியுமா?

நம் தமிழர்களின் பழைய கணக்கீட்டு முறைகள் மிகவும் வியப்பானவை.

மிகவும் நுட்பமான கணக்கீட்டு முறை அவர்களிடம் இருந்தது.

நுண்மையான அளவுகளிலிருந்து பெரிய அளவு வரை விரிவாய்க் கணக்கிட்டனர்.

அவர்களின் நீட்டல் அளவு முறையைக் கீழே பாருங்களேன்...

8 அணு	—	1 தேர்த் துகள்
8 தேர்த் துகள்	—	1 பஞ்சிழை
8 பஞ்சிழை	—	1 மயிர்
8 மயிர்	—	1 நுண்மணல்
8 நுண்மணல்	—	1 கடுகு
8 கடுகு	—	1 நெல்
8 நெல்	—	1 பெருவிரல்
12 பெருவிரல்	—	1 சாண்
2 சாண்	—	1 முழம்
4 முழம்	—	1 கோல் (அ) பாகம்
500 கோல்	—	1 கூப்பீடு
4 கூப்பீடு	—	1 காதம்.

அடேஅப்பா! எவ்வளவு பெரிய அறிவாளிகள் நம் பழம் தமிழர்கள்.....

நாமோ..... இன்று.......!?

(அடிப்படை : பாவாணரின் 'தமிழர் வரலாறு')

சொல்லடை:



இடமிருந்து வலம்: 1. மற்றவர்களிடம் நாம் செலுத்த வேண்டும். 2. இசை

மேலிருந்து கீழ்: 1. தவறு செய்பவர்களைப் பார்த்து இது இல்லையா என்று கேட்பார்கள்.

கீழிருந்து மேல்: 3. இது உள்ளவன் உயர்வான்.

வலமிருந்து இடம்: 3. பெரியவர்களிடம் இப்படி நடந்துகொள்ள வேண்டும்.

— காண்க : 7 ஆம் பக்கம்

(தனித்தமிழ் — சிறுவர்
கலை இதழ்)

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

— பாவலரேறு

குரல் : 23, இசை : 1

(குரல் : 22-இன் இசை : 11
அளவில் நிறைவுபெற்றுள்ளது.)

தென்மொழி சுறவம் 2031
(சனவரி 2000) இதழின்
இணைப்பு

நிறுவனர்:
**பாவலரேறு
பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை- 601 302.
தொலைபேசி எண் : 239 0231

இளந்தமிழ் நெஞ்சங்களே!

நீன்ற இடத்திலே நின்று கொண்டிராமல் நெடிய உலகத்தைச் சென்று பார்க்கச் சொல்லிய நம் அருந்தமிழ் ஐயா பாவலரேறு அவர்களின் 'தமிழ்ச்சிட்டு' மீண்டும் தன் சிறகு விரித்துப் பறக்கத் தொடங்கியிருக்கிறது.

நம் அரும்பெறல் ஐயா அவர்களின் இழப்பால் விக்கித்து நின்ற அதன் உடலம் ஐயா அவர்களின் கடமையைத் தொடரத் தன் நோக்கத்தை விரித்திருக்கிறது.

தமிழ இளைஞர்களின் அறிவூட்டத்திற்காக அது பறந்து திரிந்து உழைத்த உழைப்பு கொஞ்ச நஞ்சமா என்ன.....

தி.பி. 1997 - கடகம் (1966 - ஆகத்து) தொடங்கித் தி.பி. 2026 (1995 - மே - திங்கள்) வரை அது விரித்துச் சொன்னவையும், விளக்கிக் கூறியவையும், பாடிப் பழக்கியவையும் படித்துக் காட்டியவையும் ஐயகோ..... மலையளவின!

அதன் வளர்ப்பில் வளர்ந்த நம்பி நங்கைகள் இன்று அறிவினராய் ஆற்றலினராய் ஒளிர்ந்து கொண்டு இருக்கின்றனர் அல்லரோ!

அந்தச் சிட்டே இன்று மீண்டும் தன் கடமையைத் தொடர இருக்கிறது.

தென்மொழி அடையில் பொரிந்துள்ள தமிழ்ச்சிட்டுக்கு உங்கள் இல்லத்தைக் காட்டுங்கள்.

அது உங்கள் உள்ளத்துக்கு ஒளியூட்டும்.....

குடையும்

குடையும் செருப்பும் பேசின — பல
குறைகள் சொல்லி ஏசின.
நடையில் நடந்த நாடகம்! — இதை
நாமெல் லாரும் பாடுவோம்!

குடை: செத்த மாட்டின் உறுப்பே — தோல்
செருப்பே! உன்மேல் வெறுப்பே!

செருப்பு: முகத்தைப் பார்த்தால் கறுப்பே! — உடல்
முழுதும் கம்பி விரிப்பே!

குடை: காலில் கிடக்கும் எருமை! — உன்
கதையில் என்ன பெருமை!

செருப்பு: நெருப்பின் மீது நடப்பேன் — குத்தும்
நெருஞ்சி முள்ளில் படுப்பேன்!

குடை: நிழலை என்றும் கொடுப்பேன் — வந்து
நனைக்கும் மழையைத் தடுப்பேன்.

செருப்பு: காற்றால் உனக்கு நடுக்கம் — நல்ல
கடும் இருட்டில் ஒடுக்கம்!

குடை: நீரைக் கண்டு நெருங்கி — நீ
நனைவாய் உடலும் சுருங்கி!

செருப்பு: இரவும் பகலும் நண்பன் — யார்க்கும்
என்னால் இல்லை துன்பம்!

குடை: கையில் பிடித்து மதிப்பார் — உனைக்
காலில் போட்டு மிதிப்பார்!

செருப்பு: உனையும் நானே சுமப்பேன் — இதை
உணர்ந்து கொள்ளு வாயே!

குடை: உனக்கும் நிழலைக் கொடுப்பேன் — இதை
உணர்ந்து கொள்வாய் நீயும்!

செருப்பு: மேலே நின்று காப்பாய் — கீழ்
மண்ணில் தங்கிக் காப்பேன்;

குடை: நமக்குள் எதற்குப் பகையே — இனி
நண்ப ராகிப் போவோம்!

— **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

செருப்பும்

சரியான தீர்ப்பு

வழக்குமன்ற நடுவரிடம், ஒருநாள் ஒருவன் வந்து, "உங்கள் மேல் வழக்குத் தொடர வேண்டும். அதற்காகத்தான் நான் வந்துள்ளேன். நீங்கள் குற்றம் செய்தால் யார் தீர்ப்பு வழங்குவார்கள்?" — என்று கேட்டான்.

"நானே தீர்ப்பு வழங்குவேன். நடந்தது என்ன?" — என்றார் நடுவர்.

"உங்கள் எருது, தெருவில் இருந்த எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியைக் குத்திக் கொன்றுவிட்டது. சட்டப்படி நீங்கள்தான் எங்கள் கன்றுக்குட்டிக்கான இழப்பீட்டைத் தர வேண்டும்" — என்றான் வந்தவன்.

"எருதா... ஓ... அ'து ஒரு விலங்கு தானே! சட்டப்படி, விலங்குகளின் செயல்களுக்கு யாரும் பொறுப்பு இல்லை; விடையும் கூற முடியாது" — என்றார் நடுவர்.

"ஓ.... இல்லை..... இல்லை....! நான் தவறுதலாகச் சொல்லி விட்டேன். எங்கள் வீட்டு எருதுதான் உங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியைக் கொன்று விட்டது. இப்போதும் அதுதானே முடிவு" — என்றான் வந்தவன் திடுமென.

"ஓ.. அப்படியானால் அது வேறு செய்தி!" — என்று குதித்தெழுந்த நடுவர், "சட்டப்படி சொந்தக்காரர்கள் அவர்கள் எருதுகளைத் தெருவில் விடக் கூடாது. அப்படி விட்டால் தெருவில் எருது செய்யும் தீங்குகளுக்குச் சொந்தக்காரர்களே பொறுப்பு ஆக வேண்டும்" — என்று இப்போது மாற்றிச் சொன்னார் நடுவர்.

உடனே வந்தவன், "அப்படியானால் நடுவர் அவர்களே, நீங்கள்தாம் எங்கள் கன்றுக்குட்டிக்கான இழப்பீட்டைத் தரவேண்டும்" — என்றான்.

ஒரு தவற்றை — அந்தத் தவறு நடந்த இடத்தில் இருக்கும் அனைவரும் கூடித்தானே முடிவு எடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் யாரோ ஒருவர் தீர்ப்புச் சொல்ல முடியாதுதானே.

அப்படிச் சொன்னால் அவர் அவருக்குச் சார்பான தீர்ப்பைத் தான் எழுதிக் கொள்வார் என்பதை வந்தவன் புரிந்து கொண்டான்.

*



உயிரியல் பூங்கா

நமது மகிழ்ச்சியும் விலங்குகளின் துயரமும்.

- கி. குணத்தொகை

அருமைத் தமிழ்ச் சிட்டுகளே,

விடுமுறை நாள்களை நாம் மகிழ்ச்சியுடன் கழிக்கச் சில பொழுதுபோக்கு இடங்களுக்குச் சென்று வருகிறோம். அத்தகைய இடங்களுள் ஒன்று உயிரியல் பூங்கா ஆகும். இந்தப் பூங்காவில் நாம் பலநாட்டுப் பறவை யினங்களையும் விலங்கு வகைகளையும் நீந்துவன, ஊர்வன வற்றையும் பார்த்து மகிழ்கிறோம். இத்தகைய பூங்காக்கள் உலகின் எல்லாப் பெரு நகரங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட காட்சிச்சாலைகள் இல்லையென்றால் நாம் இந்தப் பறவைகளையும் விலங்குகளையும் படங்கள் வழியாகத்தான் பார்க்க முடியும். இல்லையென்றால் அடர்ந்த- அச்ச மூட்டுகின்ற காடுகளுக்குச் சென்றுதான் பார்க்க வேண்டியிருக்கும். இதற்காகப் பெரும் பொருளையும் பொழுதையும் செலவழித்து உலகையே வலம் வரவேண்டியிருக்கும். இது ஒரு சிலரால் மட்டுமே முடியும். ஆகவே இப்பூங்காக்கள் நாம் அச்சமின்றி, பொருட்செலவின்றி ஒரே இடத்தில் பல நாட்டு உயிரினங் களையும் பார்த்துப் பயன் பெறும் வாய்ப்பினைத் தருகின்றன.

'இப்படிப் பெரும் பயனையும் மகிழ்ச்சியையும் நாம் பெறுவது போல இக்காட்சிச் சாலைகளினுள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் உயிரினங்கள் மகிழ்ச்சியாய் இருக்கின்றனவா' என்று வினா எழுப்பினால் இல்லை என்ற விடைதான் கிடைக்கும்.

நாம் நம்முடைய பயன்பாட்டுக்காக நம் கையில் கொண்டு செல்லும் தின்பண்டங்களில் ஒன்றிரண்டைக் கூண்டுக்குள் இருக்கும் பறவை களுக்கோ, குரங்கு போன்ற விலங்குகளுக்கோ, மீன்களுக்கோ போடுகிறோம். அவை அவற்றை விருப்பமாக உண்ணும்போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஆனால் அதே சமயம், புலி, அரிமா, யானை போன்ற பல விலங்குகள் மிகவும் சோர்வாய்ப் படுத்துக் கிடப்பதை அல்லது பொறுமையின்றித் தத்தம் கூண்டு களுக்குள் இப்படியும் அப்படியுமாக நடையிட்டுக் கொண்டு, அண்ணாந்து வாயைப் பிளந்து பெருத்த ஒலி எழுப்பிக்கொண்டு இருப்பதைக் காண்கிறோம். அவற்றின் கூண்டுக்குள்

இருக்கும் உணவு அவற்றால் உண்ணப்படாமல் அப்படியே இருப்பதையும் காண்கிறோம்.

பரந்து விரிந்த காட்டினில் தம்விருப்பத்துக்குச் சுற்றித்திரிந்து, தேவைப்பட்ட நேரத்தில் தம் உணவைத் தாமே தேடி அடைந்து, உறவை நாடிக் கூடி மகிழ்ந்து வாழும் உயிரிகளை இப்படிக் கூண்டுக்குள் அடைத்து வைத்தால் அவை எப்படி மகிழ்ச்சியாய் இருக்கமுடியும்? தங்கக் கூண்டு அமைத்தாலும் தரமான உணவிட்டாலும் அவை அவற்றை விருப்பத்துடன் உண்பதில்லை போலும். வேறு வழியின்றித் தம் கொடும்பசியை அடக்குவதற்காகத் தின்ன வேண்டிய நிலைக்கு அவை வந்து விடுகின்றன.

தம் வண்ணச் சிறகுகளை விரித்து வானவெளியின் பெரும் பரப்பில் பறந்து திரிந்து வாழக் கூடியப் பறவைகளை கூண்டுகளுக்குள் அடைத்து வைக்கும் பொழுது அவற்றின் பறக்கும் திறன் பழுதடைந்துவிடுகிறது. இறகுகளின் ஆற்றலை அவை இழந்து விடுகின்றன. கால்களை அதிகம் பயன்படுத்த வேண்டியிருக்கிறது; இயல்புக்கு மாறான இந்நிலை காரணமாக கால்களுக்கு வலி ஏற்படுகிறது; நாளடைவில் கால்கள் வலுவிழக்கின்றன. இப்படி அவற்றின் இயல்பான பண்புகளுக்கு ஊறு நேர்ந்துவிடுகிறது; இதனால் அவற்றின் நிலை திரிந்து நேரும் சீரும் கெட்டுவிடுகின்றன.

மக்கள் உள்ளிட்ட எல்லா உயிரினங்களுமே கூட்டம் கூட்டமாகக் கூடி வாழும் பண்பினையே கொண்டிருக்கின்றன. ஆனால் இப்பூங்காக்களில் பல உயிரினங்கள் ஒற்றையாக அல்லது இரட்டையாக அல்லது மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் வைக்கப்பட்டுள்ளன. அதனால் கூடி வாழும் பண்புக்குக் குறை ஏற்பட்டு விடுகிறது. "தகுந்த துணையின்றி அவை வாடி வதங்குகின்றன; அவற்றின் உடல் நலமும் உணர்வு நலமும் கெடுகின்றன; இதனால் அவற்றின் நடத்தைப் பண்புகள் நலிவுறுகின்றன" என்று உயிரிகள் நல ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தம்முடன் இருந்த பறவையோ விலங்கோ இறந்துவிடுமானால் ஐந்து நாள்கள் வரைகூட உண்ணாமல் இருந்த உயிரிகளைத் தாம் பார்த்திருப்பதாக இப்பூங்கா ஒன்றினுள் பணிபுரியும் ஒருவர் கூறுகிறார்.

நமக்கு மகிழ்ச்சியைத் தரும் உயிரியல் பூங்கா விலங்குகள் மகிழ்ச்சியாய் இல்லை; சலிப்படைந்து காணப்படுகின்றன.

ஆகவே, இப்போதுள்ள உயிரியல் பூங்காக்களை இவ்வுயிரிகள் அவற்றுக்குரிய பண்புகளோடு வாழக்கூடிய சூழலை உடையவையாக மாற்ற வேண்டும். அப்படிப்பட்ட பூங்காக்களில் நாம் நம்மைக் கூண்டுக்குள் அடைத்துக் கொண்டு அவற்றைப் பார்த்து வர வேண்டும். அப்போது மட்டுமே நமக்கும் மகிழ்ச்சி; அவற்றுக்கும் மகிழ்ச்சியும் விடுதலையும் இயல்பான வாழ்க்கையும் கிடைக்கும்!

சொல்லடை: விடை

1 அ	ன்	பு
றி	2 ப	ண
வு	ணி	3 ப

என் பெயர்...

இன்று காலை அப்பாவின் நண்பர் அவர் பையனை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார்.

அப்பாவும் அவர் நண்பரும் பேசிக் கொண்டிருந்தனர்.

நிறை அந்தப் பையனை அழைத்துக்கொண்டு விளையாடச் சென்றான்.

"உன் பேரென்ன?" — என்றான் நிறை அவனிடம்.

"N. வழுதி" — என்றான் அவன்.

'N' — என்பது என்ன வழுதி" — என்றான் நிறை.

"அ'து என் முன்னெழுத்து, என் அப்பா பெயர் நடவரசன் தானே. அதனால்தான் நான் 'N' — என்று போட்டுக் கொள்கிறேன்" — என்றான் வழுதி.

இல்லை வழுதி அது சரிதான். அப்பா பெயர் நடவரசன் என்று இருக்கும்போது அதை 'ந' — என்றுதானே போட வேண்டும். பின் ஏன் 'N' — என்று போட்டுக் கொள்கிறாய்" — என்று நிறை வழுதியிடம் கேட்டான்.

வழுதி உடனே "ஆங்கிலத்தில் 'N' — என்று தானே வரும்" — என்றான்.

"சரி, நாம் ஏன் ஆங்கிலத்தில் முன்னெழுத்து எழுத வேண்டும். அப்படித் தான் எழுத வேண்டுமா என்ன? எங்காவது ஆங்கிலேயன் ஒருவன் தமிழில் முன்னெழுத்து எழுதுகிறானா? — பார்த்தாயா பின் நாம் மட்டும் ஏன் ஆங்கிலத்தில் எழுதிக் கொள்ள வேண்டும்.

— என்று விளக்கம் கேட்டான் நிறை. வழுதி கொஞ்ச நேரம் அமைதியாகிப் போனான்.

"ஆமாம் நிறை. நீ சொல்வது சரிதான். இருந்தாலும் எல்லாம் அப்படித் தானே ஆங்கிலத்தில் போட்டுக் கொள்கின்றனர். அதில் நாம் போடுவது மட்டும் எப்படித் தவறாகிவிடும்?" என்று வழுதி தன் ஐய(சந்தேக)த்தைக் கேட்டான்.

"எல்லாரும் தவறாக ஒன்றைச் செய்கிறார்கள் என்று நாமும் அப்படிச் செய்யக் கூடாது வழுதி. நாம் அறிந்துகொண்ட தவற்றை நாம் முதலில் திருத்திக் கொள்ள வேண்டும். பின் மற்றவரையும் திருத்த வேண்டும் தானே" — என்று நிறை சொன்னது வழுதிக்கு மிகவும் பிடித்துவிட்டது.

சரி இனிமேல் நான் ந. வழுதி — என்று தான் எழுதுவேன். அது மட்டுமில்லை; என் நண்பர்களிடமும் இதுபற்றிப் பேசுவேன் என்றவுடன் வழுதியும் நிறையும் மகிழ்ச்சியாய் சிரித்தார்கள்.

*

அறிவை மதிக்காதவர்கள்...

உலகில் அறிஞர்கள் பலர் தோன்றி மறைந்திருக்கின்றனர்.

ஆனால், அவர்களையெல்லாம் அரசுகள் உரிமையாய் வாழ விட்டதில்லை.

அறிஞர் சாக்கரடீசு நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்.

அறிஞர் ஐன்சுடின் வீட்டுச் சிறையில் வைக்கப் பட்டார்.

அறிஞர் மார்க்கசு நாடு கடத்தப்பட்டார்.

அரசுக்குத் துணையாய் — அரசுக்கு வருகிறவர்க ளுக்குத் துணையாய் யார் இருக்கிறார்களோ அவர்கள் மட்டுமே பாராட்டப் பெற்றனர், பாதுகாக்கப் பட்டனர்.

இன்றைக்கு அபுதுல்கலாம் என்கிற அறிஞரைப் பற்றி நமக் கெல்லாம் தெரியும். அவர் ஒரு தமிழர் என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி. அவர் அணு ஆய்வில் சிறந்த அறிஞர். அப்படியெல்லாம் இருந்தும் அணுவியல் ஆய்வில் அவர் மக்களுக்குப் பயன்படுகிற பெரிய கருவிகளையெல்லாம் கண்டுபிடிக்க அரசு அவரை விட்டுவிடவில்லை.

அவர் இப்போது கண்டுபிடிப்பன எல்லாம் அரசுக்குத் தேவையான போர்க் கருவிகளை மட்டும்தான்.

அந்தக் காலத்தில் அரசினைப் புகழ்ந்து பாடிய பழைய புலவர்க ளுக்கு மட்டுமே அரசன் பரிசுகள் வழங்கினான்.

மற்ற புலவர்கள் பலர் ஏழையாய் வாழ்ந்து மடிந்தனர்.

அரசனைப் புகழ்ந்து பாட மறுத்த பலர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இன்றைக்கு அரசைப் புகழ்ந்து பேச மறுப்பவர்கள் அரசைக் கண்டிப்பவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

ஆங்கிலப் பாவலர்கள் மில்டன், செல்லி இவர்களெல்லாம் அது போன்று அரசர்களால் துன்பப்பட்டவர்களே.

நம் 'தமிழ்ச்சிட்டு' ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும் அந்தப்படி அரசால் துன்பப்பட்டுப் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டவரே.

மக்கள் வாழ்க்கைக்கு, மக்கள் மகிழ்ச்சிக்காக உழைப்பவர்க ளின் வரலாறு பெரியது.

அவர்கள் உண்மையானவர்கள், அவர்கள் நேர்மையானவர்கள், நல்லவர்கள்.

அவர்களின் வரலாற்றை அரசு நமக்குச் சொல்லித் தருவதில்லை.

நாம்தாம் அவற்றைத் தேடிப் பிடிக்க வேண்டும்.

இனி நம் 'தமிழ்ச்சிட்டில்' — அப்படி அறிஞர்கள் பலரைப் பற்றியும் படிக்கலாம்.

அடுத்த தமிழ்ச்சிட்டிலிருந்து அறிஞர்கள் ஒவ்வொருவரையும் பற்றித் தெரிந்துகொள்வோம்.

*

வான்வெளியும் விண்மீன்களும்...

திடுமென மின்சாரம் நின்று போனது. பாடப் புத்தகங்களை மூடி வைத்துவிட்டுத் தெருவுக்கு ஓடி வந்தான் சுடர்.

பக்கத்து வீட்டு நம்பி, அண்டை வீடுகளிலிருந்து இளங்கோ, எழில், குழலி எல்லாரும் அதேபோல் ஓடி வந்திருந்தனர். ஒரே ஆட்டம் தான்.

மகிழ்ச்சிக் கூத்தில் பலவற்றைப் பேசிக் கொண்டனர்.

"அடேய் நம்பி,..... நீ அந்த விண்மீன்களை எண்ணிவிடுவாயா?" — என்றான் இளங்கோ.

"யாராலும் எண்ண முடியாது தெரியுமா......" — என்றான் நம்பி.

அங்கு நின்று இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நம்பியின் தந்தை ஆர்வமாய் அனைவரையும் அழைத்தார்.

"அடேய் கண்ணுங்களா— இங்கே வாங்கடா...." — என்றார் அவர்.

எல்லாரும் ஓடிப் போய் அவரைச் சூழ்ந்துகொண்டனர்.

வானில் ஒளிர்ந்து தெரிவது எல்லாமே விண்மீன்கள் அல்ல — என்றார் நம்பியின் தந்தை.

"அப்படியா, பிறகு...." என்று கேட்டனர் பிள்ளைகள்.

ஆம் வானில் மின்னி மின்னித் தெரிகின்றனவே அவை தாம் விண்மீன்கள், மற்றவை கோள்கள்.

அதோ பார் நேர் வட கிழக்கில் விண்மீன் திரளாய் ஒரு வெண்திரள் தெரிகிறதே — அதுதான் பால்வெளி மண்டலம்.

அ்தாவது அது ஒரு விண்மீன் தொகுதி. அ்தாவது விண்மீன் மண்டலம். அது போன்று பல இலக்கக் கணக்கான விண்மீன் மண்டலங்கள் இந்த வான வெளியில் இருக்கின்றனவாம்.

அதில் ஒன்றுதான் பால் வெளி மண்டலம். நாம் பார்க்கிறோமே அந்த வெண்திரளில் எத்தனை விண் மீன்கள் இருக்கின்றன தெரியுமா?

பல்லாயிரம் கோடி விண் மீன்கள் அந்தப் பால்வெளி மண்டலத்திலேயே இருக்கின்றன.

அத்தனை விண்மீன்களும் நம் கதிரவன் இருக்கின்றதே அதுபோன்று நெருப்புக் கோளமாய் ஆனது.

நம் கதிரவனைச் சுற்றிப் பதினோரு கோள்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன என்பதுதான் உங்களுக்கெல்லாம் தெரியும் இல்லையா?

அத்தனையும் கொண்ட கதிரவன் மண்டலம் என்பதே, இந்த பால்வெளி மண்டலத்தைப் படம் எடுத்துப் பார்த்தால் ஒரு புள்ளி வைக்கிற அளவிலேயே இருக்கும்.

என்னடா கண்ணுங்களா?.... எண்ணிப் பார்க்க முடிகிறதா?

— நினைத்துப் பார்க்க முடியாத



மிகப் பெரிய அண்டப் பரப்பு கொண்டது தானே நம் பால்வெளி மண்டலம்.

அந்தப் பால்வெளி மண்டலத்தைப் பற்றி ஆயிரக் கணக்கான செய்திகள் உள்ளன."

— என்று நம்பியின் தந்தை சொன்னபோது திடுமென மின்சாரம் வந்துவிட்டது.

உடனே எளிதாய்க் கண்ணுக்குத் தெரிந்த பல விண்மீன்கள் தெரியாமல் போய்விட்டன.

"சரி.... அதுபற்றி இன்னொரு நாள் பேசுவோம்.... நீங்கள் எல்லாம் கொஞ்ச நேரம் விளையாடிவிட்டு வீட்டுக்குப் போங்கள்" — என்று சொல்லிவிட்டுப் போனார் நம்பியின் தந்தை.

சுடருக்கும் நம்பிக்கும் தாங்க முடியாத வியப்பாகிவிட்டது.

"ஐயோ நம்பி... எனக்குத் தலையே சுற்றுவதுபோல இருக்குதடா.... நினைத்தே பார்க்க முடியவில்லை......

"ஆமாம்..... ஆனால் எனக்கு மிகவும் ஆசையாய் இருக்குதடா.... இதைப் பற்றியெலய்லாம் நிறைய தெரிந்துகொள்ளணும் இல்லையா?.....

"ஆமாம்.... ஆமாம்....."

— என்று விளையாட்டை மறந்து பேசிக் கொண்டிருந்தனர் அவர்கள்.

*

தெரிந்து கொள்ளுங்கள்...

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் சிந்துசமவெளிப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களின் நாகரிகம் மிகவும் பழமையானது.

அங்குக் கண்டு எடுக்கப்பட்ட மண்பாண்டங்கள் வியப்பானவை.

அங்குக் கிடைத்த நெற்களஞ்சியம் மிகப் பெரியது.

ஏறத்தாழ 52 மாத்திரி (மீட்டர்) நீளமும், 41 மாத்திரி அகலமும் 16 மாத்திரி உயரமும் உடையது, அக் களஞ்சியம். அதன் சுவர் 3 மாத்திரி பருமனுடையது.

அதுமட்டுமல்லாமல் அங்குக் கிடைத்த மண்பாண்டங்கள்

மம்மி...... ! ?

மகள்: அம்மா! அம்மா!

அம்மா: ....

மகள்: என்னம்மா எத்தனை முறை அழைப்பது ஏன் பேச மாட்டேங்கிறீங்க ?

அம்மா: உனக்கு அம்மா-ன்னு கூப்பிடாதே என்று எத்தனை முறை சொல்வது ?

மகள்: அம்மா என்று அழைக்காமல் வேறு எப்படியம்மா அழைப்பது ?

அம்மா: 'மம்மி'ன்னுதான் கூப்பிட வேண்டும்.

மகள்: உங்க அம்மாவை நீங்கள் எப்படிக் கூப்பிடுவீர்கள் ?

அம்மா: 'அம்மா'-ன்னுதான்.

மகள்: என் தாய் எப்படிக் கூப்பிடுகிறார்களோ அப்படித்தானே நானும் அழைப்பேன். நாம் பேசும் மொழியில் தானே அழைக்க முடியும். 'தமிழ்'தானே நம் தாய்மொழி! அப்படி இருக்க என்னை 'மம்மி' என்று ஏன் கூப்பிடச் சொல்கிறீர்கள் ?

அம்மா: என் அம்மாவை அம்மான்னே கூப்பிட்டுப் பழகிவிட்டேன். அதுமட்டுமில்ல.... என் அம்மாவுக்கு அப்படிக் கூப்பிட்டால்தான் பிடிக்கும். எனக்கு 'மம்மி'-ன்னுக் கூப்பிட்டால்தான் பிடிக்கும்!

மகள்: அப்போது.... உங்கள் அம்மாதான் உயிருள்ள அம்மா! நீங்க உயிரற்ற பிணம்!

அம்மா: என்னடி சொல்ற.....

மகள்: வருந்தாதீங்க..... அம்மா.... நான் உங்களை அப்படி அழைக்க மாட்டேன்! 'மம்மி' என்றால் பிணம் என்றுதான் ஆங்கிலத்தில் பொருள். பொருள் தெரியாதபோது மம்மி என்று அழைத்தேன்! இப்போது — மம்மிக்குப் பொருள் தெரிந்தபின் மம்மி என்று எப்படி என்னால் அழைக்க முடியும் ?.... அதுதான் அம்மா என்றே அழைக்கின்றேன்....

அம்மா! (அம்மா அவளைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டாள்.) 'சரிம்மா' — 'அம்மா' என்றே கூப்பிடு.....

— இறை. பொற்கொடி